**ஸ்ரீநிவாச எஸ்.ஆர். வரதன் (Srinivasa S. R. Varadhan)** 1940ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் நாள் இந்தியாவில் உள்ள மெட்ராஸ் (தற்போது சென்னை) நகரில் பிறந்தார். தற்போது இவர் நியூயார்க் பல்கலைக்கழகத்தின் கோரன்ட் கணித அறிவியல் நிறுவனத்தின் (Courant Institute of Mathematical Sciences, New York University) அறிவியல் பேராசிரியராகவும், ஃபிராங்க் ஜே. கௌல்ட் அறிவியல் பேராசிரியராகவும் இருக்கிறார்.

வரதன் 1959ஆம் ஆண்டு இளங்கலை அறிவியல் (ஆனர்ஸ்) பட்டத்தையும், அடுத்த ஆண்டில் முதுகலைப் பட்டத்தையும் சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றார். 1963ஆம் ஆண்டில் கோல்கத்தா இந்திய புள்ளியியல் நிறுவனத்திலிருந்து (Indian Statistical Institute, Calcutta) முனைவர் பட்டம் பெற்றார்; முனைவர் படிப்பில் இவருக்கு வழிகாட்டியாக இருந்தவர் இந்திய புள்ளியியல் மேதை திரு சி.ஆர். ராவ் (C.R. Rao). முனைவர் பட்ட ஆய்வுக்கட்டுரை நேர்காணலின்போது இவ்வாறு ஒரு சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது: விளக்க விவாதத்தின்போது அறையில் வரதன் அறியாத மற்றொரு நபரும் இருந்தார். அவர் வரதனைத் துளைத்தெடுக்கும் பல கேள்விகளைக் கேட்டார். தேர்வு முடிந்த பிறகுதான் அந்த நபர் ரஷ்யாவின் கணித மேதையும், சாத்தியக்கூற்றியல் நிபுணருமான ஏ.என். கோல்மோகொரோவ் (A. N. Kolmogorov) என்று வரதனுக்குத் தெரிந்தது. கோல்மோகொரோவ் இந்தியா வருவதை முன்னரே அறிந்திருந்த பேராசிரியர் ராவ், தன் சிறந்த மாணாக்கரின் திறமையை அவருக்குக் காட்டுவதற்காக திட்டமிட்டே அவ்வாறு ஏற்பாடு செய்திருக்கிறார்; கோல்மோகொரோவின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை.

ஸ்ரீநிவாச வரதன் தன் கல்விப் பணியை கோரன்ட் கணித அறிவியல் நிறுவனத்தில் முதுகலை மேற்படிப்பாளராகத் தொடங்கினார் (1963–66); அவரை உறுதியாகப் பரிந்துரை செய்தவர் மன்ரோ டான்ஸ்கர் (Monroe Donsker). வரதன் இங்கு டேனியல் ஸ்ட்ரூக்கை (Daniel Stroock) சந்தித்தார்; பின்னர் இவர் வரதனின் நெருங்கிய சகாவாகவும், வரதனின் நூல்களுக்கு இணை ஆசிரியராகவும் ஆனார்.

அமெரிக்க கணிதவியல் சங்கத்தின் (American Mathematical Society) அறிக்கைகளில் எழுதிய ஒரு கட்டுரையில் இந்த ஆரம்பகால ஆண்டுகளைப் பற்றி நினைவுகூர்கிறார் ஸ்ட்ரூக்: "அனைவராலும் ரகு என்று அழைக்கப்படுகிற வரதன், தன் தாய்நாடான இந்தியாவிலிருந்து 1963 இலையுதிர் காலத்தில் இங்கே வந்தார். ஐடில்வைல்ட் விமான நிலையத்தில் விமானம் மூலம் வந்திறங்கி, மன்ஹாட்டனுக்குப் பேருந்தில் பயணமானார். அவர் செல்ல இருந்த இலக்கு - முதுகலை மேற்படிப்புக்காக வரதனைத் தேர்வு செய்திருந்த தன்னடக்கமான பெயரைக் கொண்டதும், புகழ்பெற்றதுமான கோரன்ட் கணித அறிவியல் நிறுவனம் ஆகும்." கோரன்ட் கட்டிடத்திலிருந்த சாளரங்கள் இல்லாத அறைகளில் ஒன்று அவருக்கு அளிக்கப்பட்டது; அது முன்னர் தொப்பித் தொழிற்சாலையாக இருந்தது. இவ்வாறு ஆடம்பரமற்ற சூழல்கள் இருந்த போதிலும், ஸ்ட்ரூக் குறிப்பிடுவது போல, "அமெரிக்கா உண்மையிலேயே பெருமைப்படக்கூடிய, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய மிகப்பெரும் கணித மேதைகளில் ஒருவர் இந்தக் கட்டிடங்களிலிருந்துதான் உருவானார்."

துணைப் பேராசிரியர் (1966–68), இணைப் பேராசிரியர் (1968–72), பின்னர் 1972இல் பேராசிரியர் என பல பொறுப்புகள் வகித்த ஸ்ரீநிவாச வரதன் கோரன்ட் நிறுவனத்திற்கு உண்மையானவராகத் திகழ்ந்தார். அமெரிக்க கணிதவியல் சங்கம் வழங்கும் ஸ்டீல் பரிசு (Steele Prize) வரதன்–ஸ்ட்ரூக் இருவருக்கும் 1996இல் வழங்கப்பட்டபோது வரதன் இவ்வாறு கூறத் தவறவில்லை: "கோரன்ட் நிறுவனம் எங்களுக்கு பொருத்தமான அறிவுஜீவிச் சூழல், முனைப்பான ஊக்குவிப்பு, மூத்த சகாக்களின் - குறிப்பாக லூயி நீரம்பர்க் (Louis Nirenberg) மற்றும் மன்ரோ டான்ஸ்கர் (Monroe Donsker) ஆகியோரின் ஆதரவை வழங்கியது."

முதுகலை மேற்படிப்புக்காக தேர்வு செய்யப்பட்டபோது எழுந்த எதிர்பார்ப்புகளை வரதன் முழுமையாக நிறைவு செய்திருக்க வேண்டும். கோரன்ட் நிறுவனத்தில் வரதனுக்கு ஆசிரியப் பணி அளிக்குமாறு லூயி நீரன்பர்க் 1965இல் மன்ரோ டான்ஸ்கருக்கு எழுதினார். "வரதனைப் பற்றி மிகவும் பெருமையாகக்

கருதுகிறேன், அவருக்கு சிறந்த எதிர்காலம் உண்டு என்று நம்புகிறேன். அவர் மிகவும் இளைஞராக இருக்கிறார். சாத்தியக் கூற்றியல் துறையில் நாம் நியமிக்க இருப்பவர்களில் பல வழிகளிலும் அவரே மிகச் சிறந்தவராக இருப்பார் என்று நான் கருதுகிறேன்."

15 ஆண்டுகளுக்குப் பிறகு, பீட்டர் லாக்சுக்கு (Peter Lax) அடுத்ததாக ஸ்ரீநிவாச வரதன் கோரன் நிறுவன இயக்குநராக (1980-84) நியமிக்கப்பட்டார். நியூயார்க் பல்கலைக்கழகத்தின் தலைவருக்கு எழுதிய பரிந்துரைக் கடிதத்தில் லாக்ஸ் எழுதினார்: "கோரன்ட் நிறுவனம் புதுமைத் துடிப்பு நிறைந்தும் எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் எதிர்கொள்கிற இத்தருணம், தலைமைப் பொறுப்பை புதிய தலைமுறையின் கையில் ஒப்படைக்க வேண்டிய தருணம்." ஆக, பீட்டர் லாக்சைத் தொடர்ந்து ஸ்ரீநிவாச வரதன் கோரன்ட் இயக்குநராகவும், இப்போது ஏபல் விருது (Abel Laureate) பெறுபவராகவும் திகழ்கிறார். வரதன் இரண்டாவது முறையாக கோரன்ட் இயக்குநர் பொறுப்பை (1992-94) ஏற்றுக் கொண்டார்

(1976-77) இல் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகம் (Stanford University), (1972)ல் மிட்டாக்-லெஃப்ளர் நிறுவனம் (Mittag-Leffler Institute), (1991-92) இல் இன்ஸ்டிடியூட் ஃபார் அட்வான்ஸ்டு ஸ்டடி (Institute for Advanced Study) ஆகிய நிறுவனங்களில் வரதன் வருகைதரு பேராசிரியர் பொறுப்புகளை வகித்தார்.

வரதன் (1970-72) இல் ஆல்ஃபிரெட் பி. ஸ்லோவன் ஆய்வாளர் (Alfred P. Sloan Fellow), (1984-85) இல் குக்கென்ஹெய்ம் ஆய்வாளர் (Guggenheim Fellow) பதவிகளை வகித்தார்.

அவர் பெற்ற விருதுகள் மற்றும் பெருமைகளில் இவையும் அடங்கும்: பிர்க்காஃப் பரிசு (Birkhoff Prize) (1994), நியூயார்க் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் அறிவியல் துறை (Faculty of Arts and Sciences, New York University) வழங்கும் மார்கெரட் அண்ட் ஹெர்மன் சொகோல் விருது (Margaret and Herman Sokol Award) (1995) மற்றும் லெராய் ஸ்டீல் பரிசு (Leroy Steele Prize) (1996). பாரிசில் உள்ள பியரே மற்றும் மேரி கியூரி பல்கலைக்கழகம் (Université Pierre et Marie Curie) (2003), இந்தியாவில் உள்ள கோல்கத்தாவின் இந்திய புள்ளியியல் நிறுவனம் (Indian Statistical Institute) (2004) ஆகியவற்றிலிருந்து கௌரவப் பட்டங்களையும் அவர் பெற்றிருக்கிறார்.

வரதன் 1978 மற்றும் 1994இல் நடைபெற்ற சர்வதேச கணிதவியலார் காங்கிரஸ் (International Congress of Mathematicians (ICM) மாநாட்டின் பேச்சாளராகப் பங்கேற்றார்.

ஸ்ரீநிவாச வரதன், கலை மற்றும் அறிவியலுக்கான அமெரிக்க அகாதமியின் (American Academy of Arts and Sciences) உறுப்பினராகவும் (1988), மூன்றாம் உலக அறிவியல் அகாதமியின் (Third World Academy of Sciences) உறுப்பினராகவும் (1988), தேசிய அறிவியல் அகாதமியின் (National Academy of Sciences) உறுப்பினராகவும் (1995) தேர்வு செய்யப்பட்டார். கணித புள்ளியியல் நிறுவனம் (Institute of Mathematical Statistics) (1991), ராயல் சொசைட்டி (Royal Society) (1998), இந்திய அறிவியல் அகாதமி (Indian Academy of Sciences) (2004) ஆகிய அமைப்புகளில் ஆய்வாளர் (Fellow) ஆகவும் தேர்வு செய்யப்பட்டார்.

ஸ்ரீநிவாச வரதன் அவர்களின் துணைவியார் வசுந்தரா வரதன் (Vasundra Varadhan), நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கிறார். இவர்களுக்கு அசோக் என்றொரு மகன் இருக்கிறார். மற்றொரு மகன் கோபால், உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்களில் 9/11 அன்று நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் மறைந்து விட்டார்.